1978 ஆகஸ்ட் 31]

பெற்றவர்களுக்கு இல்லையென்று கூறுகிறார்கள். எனவே இந்த இரண்டு தகுதிகளும் சமமா? அப்படி சமமாக இருந்தால், உடனடியாக Bachelor of Physical Education பட்டம் பெற்றவர்களுக்கும் ஊக்க ஊதியம் அளிக்க அமைச்சரவர்கள் முன் வருவார்களா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம்: பரிசீலனை முடிந்தவுடன் உடனடியாக அமுலுக்கு வரும்.

திரு. செ. முத்துசாமி: மாண்புமிகு அமைச்சரவர்கள் பரிசீலனையில் இருப்பதாகச் சொன்னார்கள். பொதுவாக பரிசீலிக்கப்படுகிறதென்றால், அதற்கு ஒரு கால நிர்ணயம் செய்யப்படாமல் இருக்கிறது. அப்படிப்பட்ட அனுபவங்கள் கடந்த காலத்தில் ஏற்பட்டிருக்கின்றன. எனவே பரிசீலிக்கப்படுகிறதென்றால், இதற்கு ஒரு காலத்தை நிர்ணயித்து அதற்குள் முடிவெடுக்க நிர்வாகம் முயற்சிக்குமா என்பதை அறிய விரும்புகிறேன். மேலும் இப்பிரச்சினை குறித்த பரிசீலனை எத்தனை மாதங்களில் முடிவடையும் என்றும் அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம்: அப்படி ஒரு கட்டுப்பாட்டை அரசு தனக்கு விதித்துக்கொள்ளாது.

* 4 *Q*.—THIRU P. R. THOMAS : Will the Hon. the Minister for Education be pleased to state—

(*a*) whether any representation has been received from the Physical Education Teachers Association to merge Grade I and Grade II categories of teachers ; and

(*b*) if so, the action taken thereon ?

திரு. பி. ஆர். தாமஸ்: மாண்புமிகு கல்வி அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினுக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

(அ) தரம் I தரம் II வகை ஆசிரியர்களை ஒன்றிணைக்கக் கோரி, உடற்பயிற்சிக் கல்வி ஆசிரியர்கள் சங்கத்திடமிருந்து முறையீடு ஏதும் வரப்பெற்றுள்ளதா?

(இ) ஆமெனில், அதன்மீது எடுத்த நடவடிக்கை யாது?

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம்:

(அ) இல்லை.

(இ) இக்கேள்விக்கு இடமில்லை.

[1978 ஆகஸ்ட் 31

திரு. செ. முத்துசாமி: 1-1-1971 முதல் மற்ற பிரிவு ஆசிரியர்களுக்கு செலக்ஷன் கிரேட் தரப்பட்டிருக்கிறது. ஆனால் பிரிவு 1 உடற்பயிற்சிக் கல்வி ஆசிரியர்களுக்குத் தரப்படவில்லை என்பது உண்மையா? அப்படியானால் அதன்மீது எடுத்த நடவடிக்கை என்ன?

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம்: அது குறித்து தலைமை ஆய்வாளரிடமிருந்து குறிப்பு கேட்கப்பட்டிருக்கிறது. அது வந்தவுடன் மேல் நடவடிக்கை எடுக்கப்படும்.

திரு. எம். சங்கரலிங்கம்: முதல் நிலை உடற்பயிற்சிக் கல்வி ஆசிரியர்களுக்கு ஃபிசிகல் டைரக்டர் என்று பதவி உயர்வு கொடுப்பதால், செலக்ஷன் கிரேட் கொடுக்காமல் இருந்தார்கள்; ஆனால் ஃபிசிகல் டைரக்டர் பதவி உயர்வும் கொடுக்கவில்லை. செலக்ஷன் கிரேட் பதவியும் கொடுக்கவில்லை. எனவே இந்தக் குறையை அரசு களையுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம்: இதுபற்றிப் பரிசீலிக்கப்படும்.

திரு. பி. ஆர். தாமஸ்: முதல் நிலை உடற்பயிற்சிக் கல்வி ஆசிரியர்கள், இரண்டாம் நிலை உடற்பயிற்சிக் கல்வி ஆசிரியர்கள் என்று இரண்டு பிரிவுகளாகப் பிரிக்கப் பட்டிருக்கிறார்கள். தற்போது நமது மாநிலத்திலே இரண்டாம் நிலை உடற்பயிற்சிக் கல்விக்கான பயிற்சி நிறுத்தப்பட்டுவிட்டது. எனவே 10 ஆண்டுக் காலம் இரண்டாம் நிலையில் உடற்பயிற்சிக் கல்வி ஆசிரியர்களாகப் பணியாற்றியவர்களை முதல் நிலைக்கு உயர்த்தி, முதல் நிலை ஊதியம் வழங்க அரசு முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம்: அதுதான் பரிசீலனையில் இருக்கிறதென்று சொன்னேன்.

திரு. க. மீனாட்சிசுந்தரம்: 1957, 1960 ஆம் ஆண்டுகளிலே முதல் நிலை, இரண்டாம் நிலை உடற்பயிற்சிக் கல்வி ஆசிரியர்களுக்கு ஒரேவிதமான ஊதியம் வழங்கப்பட்டது. அந்த அடிப்படையிலே 10 ஆண்டுக் காலம் இரண்டாம் நிலையில் பணியாற்றியிருந்தால், முதல் நிலையாகக் கருத வேண்டுமென்று மாண்புமிகு உறுப்பினரவர்கள் சொன்னார்கள். அதே அடிப்படையில், ஹையர் கிரேட் ஆசிரியர்கள் பயிற்சியை எடுத்துவிட்ட நிலையில், அந்த ஆசிரியர்களை எல்லாம் இடைநிலை ஆசிரியர்களாக்கும் உத்தேசம் அரசுக்கு உண்டா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு செ. அரங்கநாயகம்: தனிக் கேள்வி போடவும்.